**சுருக்கம்**

பேரிடர் மேலாண்மை – வடகிழக்குப் பருவமழை 2023 – 'மிக்ஜாம்' புயல் காரணமாக ஏற்பட்ட மழை வெள்ளத்தால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை,**
**பேரிடர் மேலாண்மை அலகு, பே.மே.2**

**அரசாணை (நிலை) எண்.584** | **நாள் 12.12.2023**
**சோபகிருது வருடம், கார்த்திகை 26**
**திருவள்ளுவர் ஆண்டு 2054**

**படிக்க:**

1. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் செய்தி வெளியீடு எண்.2470, நாள் 09.12.2023.
2. அரசாணை (நிலை) எண்.579, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் [பே.மே.3(2)] துறை, நாள் 09.12.2023.
3. கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாநில நிவாரண ஆணையர் அவர்களின் கடித எண்.இ1(4)/1006/2023, நாள் 12.12.2023.

*****

**ஆணை:–**

தமிழ்நாட்டில் 2023 டிசம்பர் 3 மற்றும் 4 ஆகிய தினங்களில் வீசிய மிக்ஜாம் புயல் காரணமாக சென்னை மாவட்டத்தில் அதிகனமழை பெய்தது. மேலும், செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களிலும் குறிப்பிட்ட சில வட்டங்களில் கனமழை பெய்தது. இதனால் பொதுமக்களுக்கு கடுமையான பாதிப்புகள் ஏற்பட்டு அவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டது.

2. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட செய்தி வெளியீட்டில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மிக்ஜாம் புயல் வெள்ளம் காரணமாக வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவித் தொகையாக ரூ.6000/– (ரூபாய் ஆறாயிரம் மட்டும்) ரொக்கமாக வழங்கப்படும் என்று அறிவித்துள்ளார்கள்.

3. இதனைத் தொடர்ந்து, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவி வழங்குவது தொடர்பாக கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாநில நிவாரண ஆணையர் அவர்கள் மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தின்படி உரிய முன்மொழிவுகள் அனுப்பியுள்ளார்.

(த.பி.பா.)

கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாநில நிவாரண ஆணையர் அவர்கள் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு, வெள்ள நிவாரணத் தொகையை சம்பந்தப்பட்ட நியாயவிலைக் கடைகள் மூலமாக ரொக்கமாக வழங்கப்படலாம் என்றும், இதனை முறையாக கூட்ட நெரிசலை தவிர்க்கும் வகையில் டோக்கன்களை முன்னதாகவே கூட்டுறவுத் துறை மூலம் வழங்கப்படலாம் என்றும், வருமான வரி செலுத்துபவர்கள் மற்றும் ஒன்றிய மற்றும் மாநில அரசு/ பொதுத்துறை நிறுவனங்களில் பணிபுரியும் உயர் அலுவலர்களைப் பொருத்த வரையில், அவர்கள் தங்களின் பாதிப்பு விபரங்களையும், வங்கி கணக்கு எண் ஆகியவற்றை தெரிவித்து நிவாரணத்தொகையினை பெற்றுக்கொள்ள ஏற்பாடு செய்யப்படலாம் எனவும், விரிவான முன்மொழிவுகளை சமர்ப்பித்துள்ளார்.

**மிக்ஜாம் புயலால் பாதிப்புக்குள்ளான கீழ்க்கண்ட நான்கு மாவட்டங்களில் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்களின் பரிந்துரையின்படி இந்த நிவாரணம் பின்வருமாறு வழங்கப்படலாம் என்றும் தெரிவித்துள்ளார்:-**

**(அ) <u>சென்னை மாவட்டம்:</u> அனைத்து வட்டங்கள்;**

**(ஆ) <u>செங்கல்பட்டு மாவட்டம்</u>: தாம்பரம், பல்லாவரம், வண்டலூர் வட்டங்கள் முழுமையாகவும், மற்றும் திருப்போரூர் வட்டத்தில் மூன்று வருவாய் கிராமங்கள்;**

**(இ) <u>காஞ்சிபுரம் மாவட்டம்</u>: குன்றத்தூர் வட்டம் முழுமையாகவும், ஸ்ரீபெரும்புதூர் வட்டத்தில் மூன்று வருவாய் கிராமங்கள்;**

**(ஈ) <u>திருவள்ளூர் மாவட்டம்</u>: (1) பொன்னேரி (2) கும்மிடிப்பூண்டி, (3) ஆவடி, (4) பூவிருந்தவல்லி (5) ஊத்துக்கோட்டை (6) திருவள்ளூர் ஆகிய ஆறு வட்டங்கள்.**

4. இந்த புயல் மற்றும் அதிகனமழை காரணமாக சில பகுதிகளில் ATM மையங்கள் இயங்காததாலும், பயனாளர்களின் வங்கிக் கணக்கு எண்களை சேகரித்து நிவாரணம் வழங்க காலதாமதம் ஆகும் என்பதாலும், மேலும் பாதிக்கப்பட்ட பலர் தங்களது ATM அட்டை, வங்கிக் கணக்கு விவரங்கள் ஆகியவற்றை இழந்திருக்கக்கூடும் என்பதாலும், அவர்களுக்கு உடனடியாக பயனளிக்கும் வகையில் நிவாரணத்தொகை ரொக்கமாக வழங்கலாம் என ஏற்கனவே முடிவு செய்யப்பட்டுள்ளது.

5. இந்நிலையில், கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாநில நிவாரண ஆணையர் அவர்களின் கருத்துருவை கவனமுடன் பரிசீலித்து அரசு பின்வருமாறு ஆணையிடுகிறது: –

(அ) மிக்ஜாம் புயலால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட/ இரண்டு நாட்களுக்கு மேல் மழை வெள்ளம் சூழ்ந்து துணிமணிகள்/ பாத்திரங்கள், வீட்டு உபயோகப் பொருட்கள் இழந்த குடும்பங்களுக்கு (மேலே பத்தி–3ல் குறிப்பிட்டுள்ள வட்டங்கள்/ வருவாய் கிராமங்கள்) நியாயவிலைக் கடைகள் மூலமாக டோக்கன் வழங்கும் முறையை பின்பற்றி ரூ.6000/– (ரூபாய் ஆறாயிரம் மட்டும்) வழங்கப்படும்.

(ஆ) இந்த மழை வெள்ளத்தால் ஒன்றிய, மாநில அரசு/ மற்ற பொதுத்துறை நிறுவன உயர் அலுவலர்கள் மற்றும் வருமான வரி செலுத்துவோர்

மற்றும் சர்க்கரை விருப்ப குடும்ப அட்டைதாரர்கள், தங்களது வாழ்வாதாரம் பாதிப்பு/ துணி, பாத்திரங்கள், வீட்டு உபயோகப் பொருட்கள் இழப்பு ஏற்பட்டிருந்தால், பாதிப்பு விபரங்களை தங்களது வங்கி கணக்கு விவரத்துடன் தங்கள் பகுதிக்குரிய நியாயவிலைக் கடைகளில் விண்ணப்பிக்கலாம். அந்த விண்ணப்பங்கள் சரி பார்க்கப்பட்டு அதனடிப்படையில் அவர்களுக்கும் உரிய நிவாரணம் அவர்களின் வங்கிக் கணக்கிற்கு அனுப்பிவைக்கப்படும். இதற்கு தேவையான அச்சிடப்பட்ட விண்ணப்பங்கள் சம்பந்தப்பட்ட நியாய விலைக்கடைகளிலேயே தேவையான அளவு வைத்திட கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் மற்றும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் ஆகியோர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(இ) நிவாரணத்தொகை வழங்குவது தொடர்பாக, நியாயவிலைக்கடை பணியாளர்களுக்கு தேவையான பயிற்சி வழங்குதல், டோக்கன்களை குடும்ப அட்டைதாரர்களுக்கு முறையாக, முன்னதாக அளிக்கும் பணி ஆகியவற்றை கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கண்காணிப்பதுடன், தேவையான எண்ணிக்கையில் விண்ணப்பப் படிவங்கள் நியாயவிலைக் கடைகளில் இருப்பதையும் உறுதி செய்து கொள்ளவேண்டும்.

(ஈ) <u>**டோக்கன் (Token) வழங்கும் முறை :**</u>

நிவாரணத் தொகையை ரொக்கமாக வழங்குவதில் எந்தவித சிரமமும் ஏற்படாத வகையில் விநியோகிப்பதற்காக, வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட/ இரண்டு நாட்களுக்குமேல் மழை வெள்ளம் சூழ்ந்து துணிமணிகள்/ பாத்திரங்கள், வீட்டு உபயோகப் பொருட்கள் இழந்த குடும்பங்களுக்கு சம்பந்தப்பட்ட நியாயவிலைக்கடைகள் மூலம் டோக்கன்கள் வழங்கப்படும். கூட்ட நெரிசல் ஏற்படுவதை தவிர்க்க கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோர் காவல்துறையுடன் இணைந்து தக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

(உ) நிவாரண உதவிகளை வழங்கும் போது மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ள நெறிமுறைகளைப் பின்பற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

6. மேலே பத்தி 5 இல் குறிப்பிடப்பட்டுள்ள பணிக்குத் தேவையான தொகை மாநில பேரிடர் நிவாரண நிதி [State Disaster Response Fund (SDRF)] கணக்குத் தலைப்பில் வழங்கப்பட வேண்டும்.

7. மேலே பத்தி 5-இல் ஆணையிட்டுள்ளவாறு, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையுடன் இணைந்து உரிய மேல் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாநில நிவாரண ஆணையர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

8. இவ்வாணை நிதித்துறை அ.சா.எண்.3996/FS/P/2023, நாள் 12.12.2023 ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**வே. ராஜாராமன்**
**அரசு செயலாளர்**

**பெறுநர்**

கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் மற்றும்
மாநில நிவாரண ஆணையர், சேப்பாக்கம். சென்னை–600 005.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,
கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை–600 009.
அரசு முதன்மைச் செயலாளர்,
நிதித் துறை, தலைமைச் செயலகம், சென்னை–600 009.
அரசு முதன்மைச் செயலாளர்,
உள் துறை, தலைமைச் செயலகம், சென்னை–600 009.
கூடுதல் தலைமைச் செயலாளர்/ ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை – 600 003.
காவல்துறை தலைமை இயக்குநர், சென்னை –600 004.
இயக்குநர், (பேரிடர் மேலாண்மை), தமிழ்நாடு பேரிடர் அபாய தணிப்பு முகமை,
சேப்பாக்கம். சென்னை–600 005.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்,
12, தம்புசாமி சாலை, கீழ்ப்பாக்கம், சென்னை –600 010.
கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர்,
என்.வி.நடராஜன் மாளிகை, கீழ்ப்பாக்கம், சென்னை –600 010.
மாவட்ட ஆட்சியர்கள், சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர்.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலகம் (கிழக்கு, வடக்கு மற்றும் தெற்கு),
சென்னை–600 008/600 001/600 035.
மாவட்ட கருவூல அலுவலர்கள், செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர்.
முதன்மை மாநில கணக்காயர், சென்னை 600 018/600 035.

**நகல்**

முதலமைச்சர் அலுவலகம், சென்னை–600 009.
வருவாய் (ம) பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக
உதவியாளர், தலைமைச் செயலகம், சென்னை–600 009.
தலைமைச் செயலாளர் அவர்களின் முதுநிலை தனிச்செயலர்,
தலைமைச் செயலகம், சென்னை–600 009.
அரசு செயலாளர், வருவாய் (ம) பேரிடர் மேலாண்மைத் துறை அவர்களின்
முதுநிலை தனிச்செயலாளர், தலைமைச் செயலகம், சென்னை–600 009.
நிதி/(வருவாய்/வ.செ.1/வ.செ.2)த் துறை, சென்னை–600 009.
இ.கோ/உதிரி.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

12/12/23
**பிரிவு அலுவலர்**